## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 69 of 2021 | **CNR No.** | **:** | TNKI13-000081-2021 |
| **Name** | **:** | மாரி (எ) மாரியப்பன் | **Father's Name** | **:** | சுப்பிரமணி |
| **Witness for** | **:** | Plaintiff | **Calling** | **:** | PW1 |
| **Age** | **:** | 71 | **Village** | **:** | செங்கான்கொட்டாவூர் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 11.55 AM | **End Time** | **:** | 12.25 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 17.04.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**3–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் காளி, நடராஜன், தருமன், நேரு, திருப்பதி, செல்லகிளி ஆகும். என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது இடம் சேருவதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யாரிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் ஆறுமுகம், கிருஷ்ணன் ஆகும். பிரதிவாதிகள் எனக்கு எதுவும் கிரையம் கொடுக்கவில்லையா என்றால் இல்லை. கிரையம் வாங்கும் போது அளந்து பார்த்து வாங்கினேனா என்றால் ஆமாம். கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் அளந்து பார்த்த பிறகுதான் கிரையம் பெற்றேனா என்றால் ஆமாம். கிரையம் வாங்கிய சொத்தின் பரப்பளவு குறைவாக உள்ளது என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

(2) கிரையம் வாங்கிய சொத்து அளவு குறைவாக இருந்திருந்தால் கிரையம் பெற்றவர்கள் மீது தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் அளக்க விடவில்லை. எந்த தேதியில் அளந்தேன் என்றால் எனக்கு தேதி நியாபகம் இல்லை. அதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 19/3, பட்டா எண் 325 ஆகும்.

(3) வழக்கு சொத்தின் செக்குபந்தி என்ன என்றால் கிழக்கில் மெயின் ரோடு, வடக்கில் தருமன் நிலம், மேற்கிலும் தெற்கிலும் நடராஜன் நிலமும் வீடும் ஆகும். எவ்வளவு பரப்பளவு வாங்கினேன் என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கியது 46 செண்ட்தான் என்றால் சரியல்ல, 56 செண்ட் ஆகும். நான் கிரையம் வாங்கியது 46 செண்ட்தான் என்றும், பிரதிவாதிகளுக்கு சொந்தமான 10 செண்ட் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தை அனுபவிக்க பிரதிவாதிகள் எந்த இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிரையம் வாங்கிய சொத்தின் அளவு குறைவாக உள்ள நிலையில் கிருஷ்ணன் மற்றும் ஆறுமுகம் மீதுதான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 01.10.2021 தேதியிட்ட சட்ட அறிவிப்பை பிரதிவாதிகள் எனக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். சட்ட அறிவிப்பிற்கு எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பாமல் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண பத்திரத்தில் பிரதிவாதிகள் இடையூறு செய்ய

முயற்சித்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் பிரதிவாதிகளுக்கு சொந்தமான விவசாய வண்டிவழியை பொய் பாத்தியம் கொண்டாடி இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 புகாரில் கண்ட சங்கதிகள் பொய் என்பதால்தான் போலீஸார் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு புகார் கொடுக்கப்பட்டதால் தான் அதற்கான எந்த ரசீதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

(4) பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான், பங்காலி முறை ஆவார். நிலம் விற்பனை செய்தவர்களும் பங்காலி முறை என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஆள்பலம், பணபலம் உள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பாமலும் சட்ட அறிவிப்பு சங்கதிகளை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை அளந்து பார்க்காமல் 46 செண்டிற்கு பதிலாக 56 செண்ட் என்று மோசடியாக பத்திரம் எழுதி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. கிரையம் பெற்ற நிலத்திற்கு தெற்கில் பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீட்டிற்கு செல்வதற்கு 10 அடி அகலம் வண்டிவழிப்பாதை உள்ளது என்றும் அதனை மறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வண்டிவழி பாதையை மறுத்து தவறான செக்குபந்திகளை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 வழக்கு சொத்திற்கு உண்டானவை இல்லை

என்றால் சரியல்ல. என்பெயரில் உள்ள அடங்கல் கணக்கு அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(5) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்தேன். அந்த மனு தள்ளுபடி ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பொய்யான சங்கதிகளை கொண்டு அந்த மனு தாக்கல் செய்துள்ளதால் தான் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற 46 செண்ட் நிலத்திற்கு பிரதிவாதிகள் எப்போதும் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தான் பிரதிவாதிகளுக்கு சொந்தமான வண்டிவழிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. எனது தரப்பில் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8, 9 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. போலியான ஆவணங்கள் என்பதால் தான் கிராம நிர்வாக அலுவலர் அல்லது வட்டாட்சியர் அலுவலக முத்திரை இல்லை என்றும், அதனால் பிரதிவாதிகளை அது கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் செலவுத் தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(6) 3–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிவுற்றது.

(7) **2, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

AMAR ANAND
District Munsif
Digitally signed by AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai